**தீபகத்திலிருந்து...**

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
பிறந்திருக்கும் 2016 உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் இறைவனின் இரக்கத்தையும் அவரது அளவற்ற அன்பையும் நிறைவாக அளிப்பதாக. இறைத்தந்தையைப்போல் இரக்கமுள்ளவர்களாக வாழ இவ்வாண்டு நம்மை அழைக்கிறது. இவ்விரக்க வாழ்வின் மாதிரிகளாக இவ்வாண்டு நமக்கு அளிக்கும் 12 முன்மாதிரிகளை தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் காண்போம். இம்மாதம் நம்முன் நிற்கும் இரக்கத்தின் மாதிரி, தூய தொன் போஸ்கோ.

சமுதாயத்தின் சீர்கேடாய் அனைவருக்கும் தென்பட்ட ஆதரவற்ற இளைஞர்களை இறைவனின் இரக்கத்தின் அடையாளமாயிருந்து ஒன்றுக்கூட்டி, அரவணைத்து, ஆதரித்து, ஆற்றுப்படுத்தி, வழியமைத்து, அழைத்துச் சென்றவர் தொன்போஸ்கோ. அவரது காலம் முடிந்தாலும் அவர் வழியாய் இறைவன் தொடங்கிய இவ்விரக்கப்பணி முடிந்துவிடக்கூடாது என்பதால் ஆவியாரின் தூண்டுதலால் ஒரு சபையை நிறுவ அச்சபை இன்று ஆல்போல் தழைத்து சிறந்தோங்கி நிற்கிறது.

பசியுற்றோருக்கு உணவளிப்பதும், தாகமுற்றோருக்கு பருகத்தருவதும், உடையற்றோரை உடுத்துவதும், உறைவிடம் தந்து உதவுவதும், நோயுற்றோரை சந்திப்பதும் சிறைப்பட்டோரை சென்று பார்ப்பதும் இரக்கத்தின் வெளிப்பாடுகள் என்று அறிவுறுத்துகிறார் திருத்தந்தை பிரான்சிஸ். இவையனைத்தையும் முழுமூச்சோடு ஏழை எளிய இளைஞருக்காய் செய்தவர் அனாதைகளின் தந்தை தொன் போஸ்கோ. இறைத்தந்தையைப்போல் இரக்கமுள்ளவராய் வாழ்ந்த தொன்போஸ்கோவைப்போல் இரக்கமுள்ளவராய் நாம் வாழ்வோம்.

**இரக்கத்தின் ஆண்டிற்கு இம்மாத இரக்கச்செயல்:**
இம்மாதத்திலே, ஏழை எளிய மாணவர்களை தேடிப்பிடித்து யாராவது ஒருவருக்கோ அல்லது ஆதரவற்ற பிள்ளைகள் வாழும் விடுதி ஒன்றிற்கோ ஏதாவது ஒரு உதவி செய்யுங்கள்.

அன்புடன்
பணி. அந்தோணி கிறிஸ்டி.

## புத்தாண்டு 2016 நற்செய்தி

திரு. லூயிஸ் சகாயராஜ்

அன்பிற்கினியோரே,

புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்...

பொதுவாக நாளன்று நாம் பல வாக்குறுதிகளை எடுப்போம். அவற்றில் ஒருசிலவற்றையேனும் கடைபிடிக்க முயற்சிகள் செய்வோம். 2016ம் ஆண்டு நமக்கு பல வாக்குறுதிகளைத் தந்து நம்மை வரவேற்கின்றது. அவற்றை நாம் ஏற்று வாழ்ந்திட தயாரா?

## 2016 - பேசுகிறது

1. கடவுள் இருக்கின்றார் என்ற உண்மையில் மேலும் ஆழமான நம்பிக்கையை இப்புதிய ஆண்டைக் காணச் செய்வதன்மூலம் நான் உங்களுக்குத் தருகின்றேன்.
2. இறைவன் இயற்கையில் உறைகின்றார். இயற்கையை நேசிக்கவும், நம்பிடவும், பாதுகாக்கவும் நான் உங்களோடு இருக்கின்றேன்.
3. 365 நாட்களைத் தருகின்றேன், 366 நன்மைகளைச் செய்யுங்கள் நான் துணையாக இருப்பேன்.
4. இருப்பதைக் கொண்டு நிறைவடையுங்கள், உழைத்திடுங்கள், உங்களை உயர்த்திடுங்கள்.
5. துயரங்களைக் கண்டு துவளாதீர்கள், துணிவுடனிருக்க நான் உங்களுக்கு வழிகாட்டுவேன்.
6. ஒரு இருட்டைக் கண்டு மிரளாதீர்கள், நான் 366 விடியல்களைத் தந்து உங்களை மகிழ்விப்பேன்.
7. உதவிடுங்கள்-உயர்த்திடுங்கள், உரமிடுங்கள் - பலன்தருவேன்.
8. திருச்சபை-சமூகம்-குடும்பம் என உங்கள் கடமைகளை சுமத்தாமல்- சுமந்து தீர்த்திடுங்கள். உங்களை மகிழ்விப்பேன்.
9. உறவுகளை - நட்பை - பாசத்தை ஆழப்படுத்துங்கள் -அகலப்படுத்துங்கள் - நீளமாக்குங்கள், துன்ப வெள்ளத்தில் மூழ்காமல் காத்திடுவேன்.
10. உடல் நலத்ததையும், மனவளத்தையும் பாதுகாப்பாய் வைத்திருங்கள்-கடந்ததை மறந்திட நான் கற்றுத் தருகின்றேன்.
11. அச்சம் தவிர்த்து அன்பில் நிலைத்திடுங்கள், அனைத்தும் உங்களைத் தேடிவரச் செய்வேன்.
12. 2016ல் முடிவில் நான் மீண்டும் புதுப்பொலிவுடன் 2017ஆக வருவேன். நீங்களும் புதுவாழ்வைக் காணச் செய்வேன்.

**03.01.2016 திருக்காட்சி பெருவிழா திருப்பலி**

திரு. L. தாமஸ்

**முன்னுரை**

இறையன்பின் திருக்குலமே திருக்காட்சிப் பெருநாளான இன்று நற்செய்தி வாசகத்தில் மூன்று ஞானிகள் நம் பாலன் இயேசுவை காண வருவதைக் காண்கின்றோம். நாம் மீட்படையவும் நம்மால் பலரும் மீட்பை பெற்றுக்கொள்ளவும், எழு ஒளிவீசு, உன் ஒளி தோன்றியுள்ளது ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது என முதல் வாசகத்திற்கேற்ப நாம் நமது வாழ்வை அர்ப்பண வாழ்வாக ஒப்புக்கொடுத்தால், இந்த உலகம் இறைப்பிரசன்னத்தில் நிறைந்திருக்கும் என இறையன்பை அடையும் வழிகளை இன்றைய விழா நமக்கு எடுத்துக்கூறுகின்றது. எப்போது நாம் எழுந்து ஒளி வீசுகிறோமோ அப்போதே இறைவனின் மறைபொருள் நம்மில் வெளிப்படும். நம்மில் இறை ஒளி வீசுவும், இறைவனின் மறைபொருளை புரிந்து வாழ இத்திருப்பலியில் உருக்கமாய் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லையில்லா அன்பினாலே எங்களை அன்பு செய்யும் நல்ல நண்பரே, உலகிற்கு ஒளியாய் நாங்கள் வாழவும் உமக்கு உகந்தவராய் எங்கள் வாழ்வை மாற்றவும், எரியும் விளக்குத்தண்டாய் எங்கள் வாழ்வு மாறவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. முடிசூடா மன்னரே, மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் எப்படி வாழ வேண்டும், என்பதை எங்களுக்கு புரியும்படி நீர் இந்த மண்ணில் பிறந்து வாழ்ந்துக்காட்டினீர். உம்மைப்போல் நாங்களும் மனித நேயத்தோடும், இறைப்பற்றுறுதியோடும் வாழும் வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எளியோர், வறியோருக்காக ஆட்சி செய்ய வந்த தெய்வமே, எங்கள் வாழ்வில் உள்ள குறைகளை நிறைவாக மாற்றும் வரம் தாரும். அதுபோல பிறரின் குறைகளை நிறைவாய் காணும் மன பக்குவத்தையும் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இறையரசின் தூண்களான குருக்கள், கன்னியர்களுக்காக உம்மிடம் மன்றாடுகிறோம். தன்னை அழித்து பிறருக்காக ஒளிதரும் மெழுகு திரியான வாழ்வை அர்ப்பண வாழ்வாக சோதனைகளிலிருந்து மீட்டு உண்மையான ஒளிவீசும் தூண்களாக மாற்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. மழலையாய் மரியின் மடியில் தவழும் குழந்தை இயேசுவே, இன்று இந்த மண்ணில் பல குழந்தைகள், சிறுவர்கள், சிறுமிகள் பல வழிகளில் தவறுதலாய் வழிநடத்தப்படுகின்றனர். பயிற்றுவிக்கப்படுகின்றனர். இவர்களின் எதிர்காலம் குறித்த பெற்றோர்களாகிய எங்களின் வேதனையை உம்மிடம் சமர்ப்பிக்கின்றோம். எங்கள் பிள்ளைகளை நாங்கள் எப்படி கையாள்வது, உமது பாதையில் வழிநடத்துவது என்பதை எங்களுக்கு உம் தூய ஆவியின் வழியாய் அறிவுறுத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 10.01.2016 ஆண்டவரின் திருமுழுக்கு ஞாயிறு திருப்பலி

திரு. அ. இம்மானுவேல் ஜெயராஜ்

**முன்னுரை**

கபிரியேல் தூதர் மரியாள் தன் அழைப்பை புரிந்து ஏற்றிட வயது முதிர்ந்த எலிசபெத் கருவுற்றிருப்பதை கூறி இறைவனால் எல்லாம் கூடும் என்பதை மெய்பித்தார். மரியாள் இயேசுவை தன் கருவில் சுமந்து எலிசபெத்தம்மாளை சந்தித்தபொழுது கருவிலுள்ள யோவான் மகிழ்ச்சியடைந்தார். யோர்தானில் யோவான் மக்களுக்கு திருமுழுக்கு கொடுத்துக் கொண்டிருந்தபொழுது இயேசு அவரிடம் திருமுழுக்கு பெறுகின்றார். அப்பொழுது வானம் திறக்கப்பட்டு தூய ஆவி புறாவடிவில் இறங்கி இயேசுவின் தோள்மேல் அமர்கின்றது. வானத்திலிருந்து "இவரே என் அன்பார்ந்த மகன், இவரில் நான் பூரிப்படைகின்றேன்" என்ற குரல் இயேசுவை மெசியா என்று அறிக்கையிடுகின்றது. மத்தேயு 11:11ல் "மனிதராயப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை" என்று கூறி இயேசு திருமுழுக்கு யோவான், எலியா என்று பறைச் சாற்றுகின்றார். நாம் நம் வாழ்வில் எவ்வாறு கிறிஸ்துவை வெளிப்படுத்துகின்றோம் என்பதை சிந்தித்து செயல்பட இத்திருப்பலி நமக்கு வழிகாட்ட நாம் பெற்ற திருமுழுக்கு வாயிலாக இறைவனின் மக்களாகும் வரம் கேட்டு பக்தியுடன் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தும் ஆயர்களும் குருவானவர்களும் நல்லாயனைப்போல் ஆட்டுக்குட்டிகளை தம் கையில் ஒன்று சேர்த்து முடமான ஆட்டினை தோளில் தூக்கிக் கொண்டு கவனத்துடன் நடத்தி அவற்றை அக்கறையுடன் வழிநடத்தும் அருள்வாழ்வை தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர்களாகிவிட்டோம் என்று மனநிறைவு பெறாமல் பெற்ற திருமுழுக்கின் மூலமாக பெற்றுக்கொண்ட தூய ஆவியின் வழிநடத்துதலோடு நற்செய்திக்கு சான்று பகரும் மக்களாக வாழும் அருள்வாழ்வை தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தற்போது வெள்ளத்தினால் இறந்தவர்கள், வீடிழந்தவர்கள், வாழ்வை இழந்தவர்கள், அடிப்படை வசதியில்லாமல் முகாம்களிலும், தெரு ஓரங்களிலும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு அவர்களின் துயரநிலையிலிருந்து மீண்டுவர நல்லுள்ளம் படைத்தவர்கள் வாயிலாக அவர்களுக்கு புதுவாழ்வளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. திருமுழுக்கின் மேன்மையை குறித்து சிந்திக்கும் இன்று தங்கள் நம்பிக்கைக்காக துன்புறுத்தப்படுவோருக்காக செபிக்கின்றோம். நீரே அவர்களின் தேற்றரவாக இருந்து அவர்களை திடப்படுத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**15.01.2016 பொங்கல் திருவிழா** **திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

இறைவன் தம் வல்லமையினாலும் ஞானத்தினாலும் படைத்த இயற்கை வளங்களுக்காகவும், கால்நடைகளுக்காகவும் விண்ணிலும் மண்ணிலும் தோன்றும் அதிசயமான படைப்புகளுக்காக நாம் இன்று நன்றி கூறுகின்றோம். பழைய ஏற்பாட்டில் மக்கள் தங்களின் முதல் விளைச்சலை இறைவனுக்கு நன்றிபலி செலுத்தியதை காண்கிறோம். இன்று தமிழர்கள் அனைவரும் சிறப்பாக கொண்டாடும் பொங்கல் திருநாளிலும் உழவர்களும், பொங்கல் விழாவினை சிறப்பிப்பவர்களும் தங்களின் உழைப்பின் பயனாக கிடைத்தவைகளை நன்றியோடு இறைவனுக்கு படைப்பதை அறிவோம். எனவே, இந்த நன்னாளிலே "பழையன கழிந்து புதியன புகுதல்" என்ற சொற்களுக்கேற்ப நம்மிடமுள்ள தேவையற்ற எண்ணங்கள், பழக்கவழக்கங்கள், செயல்கள் இவைகளை களைந்து புதிய நல்ல பண்புகளை நம்மில் உருவாகவும், இறைவன் நமக்கு கொடுத்த அனைத்து இயற்கை வளங்களுக்கும் கால் நடைகளுக்கும் நன்றி சொல்லவும், தமிழர் திருநாளான இன்று சாதி, மதம், இனம், மொழி, ஏழ்மை, கல்லாமை போன்ற பாகுபாடுகளைக் களைந்து அனைவரோடும் நல்ல உறவினை வளர்க்கக் கூடிய நல்ல மனதைத் தரும்படியும் இத்திருப்பலியில் மன்றாடுவோம். மேலும் நமக்காக அன்றாடம் உழைக்கும் உழவர்கள், விவசாயிகள் அனைவருக்கும் நல்ல உடல் உள்ள சுகம் தந்து, நோயற்ற வாழ்வும், அமைதியான குடும்ப சூழ்நிலையும் பெற்று வளமாக வாழ வேண்டுமென்றும் இயற்கை சீற்றத்தால் இவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்கவும் இத்திருப்பலியில் சிறப்பாக செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

*(கீழுள்ள அந்தந்த மன்றாட்டுக்கு ஏற்றபடி படம் அல்லது பொருட்களுடன் பிள்ளைகள் வந்து முன்னால் நிற்பது நன்று)*

1. **சூரியன்:** படைப்பின் பரம்பொருளே இறைவா, ஒளியைத் தருவதற்கும், தாவரங்களின் வளர்ச்சிக்கும் நோய் கிருமிகளை அழிப்பதற்கும் நீர் படைத்த சூரியனுக்காக நன்றி கூறுகின்றோம். உமது சித்தத்தின்படி தன்னுடைய ஒளிகற்றைகளால் ஒளிதரும் சூரியனைப்போல நாங்கள் என்றும் உம் விருப்பத்தின்படி நடக்கவும், எங்களால் முடிந்தவரை பிறருக்கு உதவும் நல்ல மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. **கரும்பு:** அனைவரும் விரும்பி உண்ணும் இனிப்பும், சுவையும் நிறைந்த கரும்பினை படைத்த இறைவா உமக்கு நன்றி. இக்கரும்பின் தன்மையைப்போல நாங்களும் சாதி, மதம், இனம், ஏழ்மை, போன்ற பாகுபாடுகளைக் காட்டாமல் அனைவரிடமும் இனிமையாக பழகும் நல்ல பண்பினை தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. **இஞ்சி, மஞ்சள்:** குணமளிக்கும் மருத்துவரே, மருத்துவ குணநலன்களும், உடல் ஆரோக்கியத்திற்கும் எல்லா நல்ல காரியங்களுக்கும் முதன்மையாக பயன்படுத்தும் இஞ்சி, மஞ்கள் போன்ற தாவரங்களை தந்ததற்காக உமக்கு நன்றி. மருத்துவமனையில் உள்ளவர்கள், தீராத வியாதியினால் துன்பப்படுபவர்கள் உமது குணமாக்கும் வல்லமையால் குணமாக்க வேண்டுமென்றும், நீர் தந்த பொருட்களைப்போல நாங்களும் நோயுற்றவர்களிடம் குணமாக்கும் செயல்களாக கனிவோடும், ஆறுதலாகவும் நடந்துக்கொள்ளும் வரத்தை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. **உழவு விவசாயிகள்:** நலன்களின் நாயகனே இறைவா, "உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகள்" என்ற சொற்களுக்கேற்ப தங்களுடைய நிலத்தில் கடினமாக உழைக்கக்கூடிய உழவர்களையும் விவசாயிகளையும் கொடுத்தமைக்காக நன்றி. எங்களுக்காக உழைக்கும் இவர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும் இவர்களின் பொருளாதார வாழ்வு முன்னேற்றமடையவும், அரசாங்கத்திலிருந்து இவர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகள், சலுகைகள் தேவையான நேரங்களில் கிடைக்க உதவிடுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. **கால்நடைகள்:** எங்களை காக்கின்ற தெய்வமே இறைவா, உம் படைப்புகளாகிய கால்நடைகளுக்காகவும் இவைகள் வழியாக நாங்கள் அடையும் பலவிதமான நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி. மனிதர்களாகிய நாங்கள் இக்கால்நடைகளிடம் அன்பும், இரக்கமும் காட்டி அவைகளை நன்முறையில் பேணி காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

6. **பொங்கல்:** அதிசயங்களை செய்கிற இறைவா, நன்றியின் நாளாக நீர் தந்த இந்த நாளுக்காக நன்றி கூறுகிறோம். இந்நாளிலே நாங்கள் அனைவரும் மகிழ்ந்து உண்பதற்கு நீர் தந்த அரிசி, சர்க்கரை, வெல்லம், பருப்பு மற்றும் வாசனைப்பொருட்கள் அனைத்திற்கும் நன்றி கூறுகிறோம். இந்த உணவு பண்டங்கள் அனைத்தும் சேர்ந்து சுவையான "பொங்கல்" என்ற உணவை தருவதுபோல நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒற்றுமையாகயிருந்து நல்லதொரு சமுதாயத்தையும், திருச்சபையையும் உருவாக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 17.01.2016 பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு **திருப்பலி**

திரு. D.V.R. ராஜா

### முன்னுரை

அன்பு இறைச்சமூகமே, அகிலத்தைப் படைத்த இறைவன் அவர் சாயலாகவே நம்மைப் படைத்தார். புவியிலுள்ள அனைத்தையும் நாம் அனுபவிக்க நம்மை உரிமையாளர்களாய் ஆக்கினார். நாம் பிறக்கும்போது எதையுமே கொண்டுவரவில்லை. ஆயினும் யாவும் அவர் நமக்களித்து ஈவு. அதற்கு பிரதிபலன் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. நாம் செலுத்த வேண்டியது நன்றியே. எனவே நாம் அவரை எப்போதும் மகிமைப்படுத்த வேண்டும். இதையே இன்றைய வாசகங்களும் நற்செய்திகளும் இயம்புகிறது. அறுவடையின் ஆண்டவர் இந்நன்நாளில் அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் ஏழை எளியோரையும் விவசாயிகளையும் இவர்களின் உடமைகளையும், உறவுகளையும் இழந்தவர்களின் வாழ்வில் மீண்டும் ஏற்றம்பெறும் இறையாசீரை நிறைவாய் பெற இத்திருப்பலியில் உருக்கமாய் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பின் அருட்சுடரே இறைவா திருச்சபையின் தலைவர் திருத்தந்தை அவர்கள் தனது மந்தையை தொடர்ந்து அன்பு வழியில் நடத்தி, பலவீனர்கள் தங்கள் அன்றாட பிரச்சனைகளால் ஆண்டவரை விட்டு விலகாமல் இருக்க தங்கள் ஆயர்கள், குருக்கள், துறவியர் இவர்களைக்கொண்டு மக்களை ஆண்டவரிடம் இணைக்கும் பாலமாக விளங்கிடவும், இறைஇரக்கத்தின் ஆண்டில் உலக மக்கள் அனைவருக்கும் இறைவனின் இரக்கம் பூரணமாய் கிடைத்திடவும், ஆன்ம சரீர நலன்களால் நிரப்பி பாதுகாக்கப்படவும் இரக்கத்தின் ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் இறைவா, எம் நாட்டையாளும் ஆட்சியாளர்கள் தங்களின் பொறுப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து மக்களின் தேவையை அறிந்து சீரான பாகுபாடற்ற ஆட்சியும் நிர்வாகமும் நடைபெற மக்களின் சுதந்திரம் உரிமைகள் பாதுகாக்கப்பட சாதி வேற்றுமை களைந்து நாட்டையும் மக்களையும் உயர்த்த சுயநலமில்லாத நேரிய திட்டங்களை வகுத்து, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தி இயற்கை வளங்கள், நீர்நிலைகள் அழியாமல் பாதுகாக்கப்பட இவர்களுக்குத் தேவையான ஞானத்தையும் அருளாற்றலையும் நல்கி இறைஇரக்கத்தின் மக்களாய் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. பரிவுள்ளம் கொண்ட இறைவா, எம் இளைஞர், இளம்பெண்களை கல்வியிலும், பக்தியிலும் நாட்டம் செலுத்தி வாழ்வில் முன்னேறவும், தங்கள் ஞானம், அறிவு, திறமை இவைகள் இச்சமூகத்திற்கு பயன்படும்படியாக இவர்களின் செயல்திறன்கள் அமையவும், முற்போக்கான சிந்தனைகளையும், இயலாதவர்களுக்கு உதவிகள் செய்திடவும் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து சமூகத்தில் இறை இரக்கத்தின் மக்களாய் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. எம் பாசமிகு இறைவா, பங்கிலுள்ள குடும்பங்கள் அனைத்தும் இறைவனின் கருவிகளாய் விளங்கி ஆண்டவரின் இரக்கத்தைப்பெற்று தங்கள் சொல், செயல், திறமைகளால் இறையரசை பறைச்சாற்றும் மக்களாய் திகழவும், ஆண்டவர் இவர்களின் தேவைகளை நிறைவேற்றி நோய் நொடியிலிருந்தும் கடன் பிரச்சனை, பணம் பற்றாக்குறை, செல்வம் போன்றவற்றிலிருந்து விடுவித்து தங்கள் குடும்பத்தில் இறைவனின் மகிழ்வும், சமாதானமும் விளங்க இரக்கத்தின் ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

**20.01.2016 புனித செபஸ்தியார் திருப்பலி**

திரு. அ. இம்மானுவேல் ஜெயராஜ்

**முன்னுரை**

புனித செபஸ்தியார் பணக்கார பெற்றோருக்கு மகனாக பிறந்தார். சிறந்த கல்வியாளர் அவர் சிறை கைதிகளை சந்தித்து உதவி செய்து வந்தார். இவருடைய கிறிஸ்துவ வாழ்வை அறிந்த டையோகிளிஷியன் என்ற உரோமை அதிபர் அவரை கண்டித்து கிறிஸ்துவைப்பற்றி யாரிடமும் போதிக்க கூடாது என்று கட்டளையிட்டார். செபஸ்தியார் அதற்கு இணங்காததால் அவரை ஒரு மரத்தோடு சேர்த்து கட்டிப்போட்டு அம்புகள் எய்து கொன்றனர்.

ஒரு விதவைப் பெண் அவரது இறுதி சடங்கை நிறைவேற்றியபொழுது அவர் உயிருடன் இருப்பதை அறிந்து அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்து அவரை பிழைக்கச் செய்தார். செபஸ்தியார் உயிருடன் இருப்பதை அறிந்த உரோமை அதிபர் அவரை அடித்து கொன்று போட ஆணையிட்டார். புனித செபஸ்தியார் கி.பி. 288ல் வேதசாட்சியாக மரித்தார். தூய செபஸ்தியாரின் பக்தியாலும், அவரின் பண்பு நலன்களாலும் நம்மை நிரப்பும்படி இறைவனிடம் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாவீது தன் தந்தையின் ஆடுகளை மேய்க்கும்பொழுது ஆடுகளை காக்க தன்னையே அர்ப்பணிப்பேன் என்று கூறியதுபோல தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திருச்சபையினரை ஞான மேய்ப்பர்கள் காத்து வழிநடத்திட தியாக உள்ளம் வேண்டி மறைசாட்சியான தூய செபஸ்தியார் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. கனமழையினாலும், பெருவெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட தமிழக மக்கள் தொற்று நோயினால் பாதிக்கப்படாமலிருக்க உமது அருட்கரம் தமிழக மக்களைக் காத்து வழிநடத்த எங்கள்மீது மனமிறங்க வேண்டி தூய செபஸ்தியார் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. மழையினால் பாதிக்கப்பட்ட மக்கள் யாராக இருந்தாலும், எம்மதத்தினராயிருந்தாலும் எவ்வித பாகுபாடுமின்றி அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து உதவிகளும் நிறைவாக சென்றடைய நல்லுள்ளம் படைத்த மனிதர்களை கொண்டு உதவிகள் வழங்கிட உமது துணைவேண்டி தூய செபஸ்தியார் வழியாகஇறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**24.01.2016 பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. பத்மாவதி

**முன்னுரை**

கண், கைகளைப் பார்த்து, நீ எனக்கு தேவையில்லை என்றோ, தலை கால்களைப்பார்த்து நீங்கள் எனக்கு தேவையில்லை என்றோ சொல்ல முடியாது. ஏனெனில் மற்ற உறுப்புகளை ஒதுக்கிவிட்டு உடலால் தனித்து செயல்பட முடியாது. அதுபோல் நாமும் நம் கண்முன் கடவுளின் மக்கள் துன்பப்படும்போது ஒதுங்கி போகாது, "விண்ணகத்தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல், நீங்கள் இரக்கம் உள்ளவராய் இருங்கள்" என்பதற்கிணங்க, உதவிகரம் நீட்டுவோம். செயல்படுவோம், மகிழ்வோம் இயேசுவின் ஊழியர்களாய். எனவேதான் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாய் இருப்பதுபோல் கிறிஸ்துவும் இருக்கிறார், நாமும் இயேசுவை போல் செயல்புரிவோம். அவர் காட்டிய வழி நடப்போம். நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து இவ்வுலகிற்கு வந்ததே பாவிகளை மீட்கவும், விடுதலையளிக்கவும், குணமளிக்கும் ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவுமே என்பதினை தூய லூக்காஸ் நற்செய்தியாளர் மிக அழகாக எடுத்துக் கூறுகிறார். நம்மால் இயன்றவரை பொருள் உதவியும், செபஉதவியும் செய்யும் தாராள மனம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இதோ "உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களுடன் இருப்பேன்" எனக் கூறிய இயேசுவே, உமது மணப்பெண்ணாகிய திருச்சபையையும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் துறவறத்தார் அனைவரையும் காத்து துன்பப்படும் மக்களை இனம் கண்டு உதவிட நல்மனம் அருளுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஒற்றுமையின் ஊற்றாய் திகழும் மூவொரு இறைவா, நாங்கள் பாகுபாடுகளினாலோ, பிரிவினைகளாலோ, மனதளவிலோ, செயல்களிலோ ஒருவரையொருவர் வெறுப்பதிலும் மதியாது இருப்பதிலும் ஈடுபடாது ஒரு மனத்தோராய் அன்புள்ளம் கொண்டு வாழும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் இறைவா, அன்பு கடவுளிடமிருந்து வருகிறது, அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் என்பதினை நினைவில் கொண்டு துன்பப்படுவோர்களின் துயர்நீக்கி உதவிட எங்களுக்கு நல்ல மனதைத்தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" என்ற இயேசுவே, எம் வாலிப பிள்ளைகள் எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் இரக்கமிக்கவர்களாய் வாழவும், தங்களின் வாழ்வில் உம்மைப்போன்ற பரந்த தாராள மனம்படைத்த நல்லுள்ளத்தை அவர்களுக்கு அளித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**25.01.2016 திருத்தூதர் தூய பவுலின் மனமாற்றம் திருப்பலி**

எஸ். கிறிஸ்டி

**முன்னுரை**

இறையேசுவில் நிறையன்புள்ளவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவரையும் இன்றைய திருவழிபாட்டிற்கு அன்போடு வரவேற்கின்றோம். இன்றைய திருவழிபாடானது **திருத்தூதரான தூய பவுலின் மனமாற்றத்தை** நமக்கு எடுத்துக் கூறுகிறது. பவுல் சிசிலியாவின் தர்சு நகரத்தை சேர்ந்த உரோமை குடிமகனாவார். தொடக்கத்தில் கிறிஸ்தவர்களைத் தேடி அழிக்கும் படைவீரராக பணியாற்றியவர்.

கிறிஸ்துவை சந்தித்தப்பின் தன் வாழ்வு முழுமையும் இயேசுவுக்காக அர்ப்பணித்தவராய் "வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார் " என்று கூறும் அளவிற்கு மனநிலையில் மாற்றம் பெற்றார்.உண்மையான மனமாற்றம் என்பது அன்றாட வாழ்வில் மாற்றத்தை கொண்டுவரும் மாற்றம் இருக்குமிடத்தில் முன்னேற்றம் இருக்கும் என்பதற்கு சிறந்த சான்றாக விளங்கினார். எனவே, தூய பவுல் சென்ற மனமாற்றத்தின் பாதையில் நாமும் பயணம் செய்து, மாற்றத்தில் ஏற்றம் காண்பவர்களாய் , இறையாட்சியின் மக்களாய் திகழ இத்திருவழிபாட்டில் பக்தியுடன் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அனைத்திற்கும் அனைத்துமான இறைவா, எம் தாயாம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் யாவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை விதைகளாகக் கொண்டு உலகெங்கும் இறையாட்சியின் விழுமியங்களை அறுவடை செய்யும் கருவிகளாகத் திகழ்ந்திட வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அனைத்துலகின் ஆண்டவரே எம் நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் தலைவர்கள் அனைவரும் நாட்டின் முன்னேற்றத்தில் தன்னலம் துறந்து பிறர் நலனில் அக்கறைக் கொண்டு நல்லாட்சிப் புரிந்திடவும், ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து சமத்துவம், சகோதரத்துவம் இவற்றை மலரச் செய்யும் சிறந்த தலைவர்களாகத் திகழ்ந்திட வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஆற்றலின் ஊற்றே எம் இறைவா எங்கள் அன்றாட வாழ்வில் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்து தூய பவுலடியாரைப் போல நற்செய்தியின் தூதுவர்களாய் திகழ்ந்திடவும் எங்கள் வாழ்வே ஓர் நற்செய்தி என்பதை உணர்ந்து சிந்தனை சொல் செயல் இவற்றால் உமக்கு பிரமாணிக்கத்தோடு வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. இறை இரக்கத்தின் ஆண்டவரே, உமது அளவில்லாத அன்பு பெருக்காலும், இரக்கத்தினாலும் உலகெங்கும் உள்ள ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் உமது நிறைவின் அருளைப் பொழிந்து காத்திடவும், அவர்கள் தங்கள் வாழ்வில் மகிழ்ந்திருக்கவும், வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. அனைத்திற்கும் புகலிடமான எம் இறைவா, எம் குழந்தைகளுக்கு நல்ல ஞானத்தையும் இளையோருக்கு நல்ல வழிக்காட்டுதலையும் முதியோருக்கு நல்ல பாதுகாப்பையும்,

தம்பதியரிடையே பிரமாணிக்கத்தையும் கொடுத்து உமது நிறைவாழ்வில் பங்கேற்க தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**26.01.2016 தூய திமோத்தி மற்றும் தீத்து திருவிழா திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்றைய நாளில் நமது நினைவில் தூய திமோத்தேயுவும், தூய தீத்துவும் சிறப்பு பெறுகிறார்கள். தூய திமோத்தேயு தூய பவுலின் முதல் நற்செய்தி பயணத்தின் போதனையில் கிறிஸ்தவராகி பின் இரண்டாம் பயணத்தின்போது அவரது உடனுழைப்பாளரானார். தூய திமோத்தேயு லிஸ்திராவை சேர்ந்தவர். கிரேக்கரான தந்தைக்கும், யூதகுல தாய்க்கும் பிறந்தவர். இவருக்கு தூய பவுலில் இரண்டு திருமுகங்கள் எழுதியுள்ளார். 97ம் ஆண்டில் இவர் வேதசாட்சியாக உயிர் நீத்தார்.

இவரைப்போலவே புற இனத்தவரான தூய தீத்துவும் கிறிஸ்தவராகி தூய பவுலுக்கு பல பணிகளில் உதவி புரிந்தார். இவரை புனித பவுல் க்ரீட் நகருக்கு ஆயராக்கினார். கொரிந்து நகர் திருச்சபையை சீர்திருத்தம் செய்யும்படி இவரை கேட்டுக்கொண்டபடி அவர்களை விவேகத்துடனும், அன்புடனும், வெற்றியுடன் சீர்திருத்தினார். விசுவாசிகளை எவ்விதம் பாதுகாப்பது என்பது பற்றி, ஒரு திருமுகத்தை புனித பவுல் புனித தீத்துவுக்கு அனுப்பினார். இவ்விரு புனிதர்களின் கிறிஸ்துவ விசுவாசம் நம்மை பரவசத்தில் ஆழ்த்துகிறது. நாமும் நமது கிறிஸ்துவ விசுவாசத்தை பாதுகாத்து, கிறிஸ்துவுக்கு சான்று பகரும் சாட்சிய வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர், பொதுநிலையினர் கிறிஸ்து இயேசுவின் சத்திய போதனைகளில் நம்பிக்கை வைத்து தவறான போதகர்களின் வழிநடத்துதலில் இருந்து இறைமக்களை விடுவித்து காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கமே உருவான எம் இறைவா, இயற்கை சீற்றத்தினாலும் பேரிடர்பாடுகளினாலும் துன்புறும் மக்கள் பொறுப்பற்றவர்களின் அலட்சிய போக்கினால், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி இளைப்பாற வழியின்றி தவிக்கும் இந்நிலையை மாற்றி வாழுகின்ற மக்கள் அனைத்தும் பெற வழிவகை செய்தருள வேண்டுமென்று என்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாப்பின் இறைவா, நமது தமிழகத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளையளித்து மனித நேயத்திற்கு மதிப்பளித்த செல்வந்தர்களையும் தொண்டு நிறுவனங்களையும், நீர்தாமே ஆசீர்வதித்து அவர் தம் குடும்பங்களையும் காத்து வழிநடத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. ஞானத்தின் ஊற்றே இறைவா, இக்கால சூழலில் வளர்ந்து வரும் எங்கள் இளைய தலைமுறையினர் நல்ல ஞானத்தில் வளரவும் நாட்டில் நடக்கும் பல வன்முறை கொடுமைகளிலும் தவறான தீய பழக்க வழக்கங்களிலும், சிக்கி சீரழியாமல் தங்களை பாதுகாத்து கொள்ளக்கூடிய ஞானத்தை வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**27.01.2016 தூய மெர்ஸி அஞ்ஞேசம்மாள் திருவிழா திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இன்று நாம் தூய மெர்ஸி அஞ்ஞேசம்மாள் என்னும் புனிதையை நினைவில் கொள்வோம். இவர் கி.பி. 1474ல் பிறந்து கி.பி. 1540ல் இறைவனடி சேர்ந்தார். ஒருவரும் பாவிகளாக மரிக்க கூடாது என்ற எண்ணம் கொண்டவராக இருந்தார். இந்த ஒரு அருமையான நோக்கத்திற்காகவே வானதூதர்களிடமும் புனிதர்களிடமும் பேசும் பேறு இவருக்கு கிடைத்தது. திவ்விய நற்கருணையின்மீது அளவற்ற பிரியம் கொண்டு அந்த பேற்றினை உயிராக மதித்து வந்தார். உலகியல் நடப்பை கண்ட இவருக்கு இளம் பெண்களிடமும் தாயர்மார்களிடமும் இரக்கம் பிறந்தது குடும்பங்களில் நல்ல தாய்மார்கள் உருவாவதில்லை. அதற்கான கல்வி அவர்களுக்கு கிடைப்பதில்லை. அதனால் சமூகத்தில் பல சீர்கேடுகள் நடப்பதைக்கண்டு மனம் நொந்தார். அதற்காகவே இளம் பெண்களுக்கு கிறிஸ்தவ கல்வி பயிற்சி அளிப்பதற்காக சபை ஒன்றை நிறுவினார். தாழ்ச்சி நிறைந்த பெண்மணியாக அவர்

விளங்கியதால் தனக்கு பிரியமான புனித ஊர்சுலம்மாள் என்ற புனிதையை அதன் பரலோக பாதுகாவலியாக நியமித்து, அவரது பெயரையே சபைக்கும் வைத்தார். புனித மெர்ஸி அஞ்ஞேசம்மாளின் சிந்தனையான "நீ அடைய விரும்புவதை அடையும்படியாக பலவந்தம் செய்யாதே. கடவுள் அனைவருக்கும் மனச்சுதந்திரம் கொடுத்துள்ளார். தனக்கு கீழ்ப்படியும்படி யாரையும் அவர் கட்டாயப்படுத்துவதில்லை" என்ற நோக்கத்தை மனதில் கொண்டு பாவிகள் மனந்திரும்ப வேண்டும் என்ற வேண்டுதலோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. பாசமிகு இறைவா, திருச்சபையின் மக்களை பாசத்துடன் அணைக்கும் நம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் தற்கால சமூக நிலையையொட்டி இறையாட்சியை கொண்டுவரும் வழிமுறைகளையும் பக்தி முயற்சிகளையும் திறம்பட பயன்படுத்தி அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் சக்தியாக மாற உம்மை மன்றாடுகிறோம்.
2. நீர் தேர்ந்துகொண்ட மக்களோடு உடன்படிக்கை செய்து கொண்டவரே உமது பேரன்பை அனைத்து மக்களும் அறிய செய்யும்படியும், தலைமுறை வழியாக நிலைக்கும்படி செய்யவும், உமது உயிரையே பணயமாக வைத்து மீட்டருளிய மீட்பின் பலனை அனைவரும் உணர்ந்து வாழ உம்மை மன்றாடுகிறோம்.
3. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் குடும்பங்களை உம்மிடம் சமர்ப்பிக்கிறோம். எம் வழிதோன்றல்களான எம் சந்ததியினர் உம்மீது விசுவாசம் கொண்டு வாழவும், வாழ்வாதாரமான விவிலியத்தை கற்று உமது வார்த்தைகளை கடைப்பிடிக்கவும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் மனப்பக்குவம் பெறவும்,பிறருக்கு உதவும் மனப்பாங்கு பெறவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. நலமளிக்கும் இறைவா, நோயுற்றவர்களுக்காக உம்மை மன்றாடுகிறோம். குடும்பங்களிலும், மருத்துவமனைகளிலும், முதியோர் இல்லங்களிலும் நோயின் கொடுமையால் வாடி, நலிந்து கொண்டிருக்கும் அனைத்து நோயாளிகளையும் உமது திருவுளப்படி நோயின் வேதனை நீங்கி நலமடைய வேண்டுமென்றும் அவர்களை கவனிக்கும் மருத்துவர், செவிலியர் யாவரையும் காத்து வழிநடத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 28.01.2016 தூய தாமஸ் அக்குவினாஸ் திருவிழா **திருப்பலி**

திரு. I. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நம் தாய் திருச்சபையானது கத்தோலிக்க கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களின் பாதுகாவலர் தூய தாமஸ் அக்குவினாஸ் விழாவை கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. மகன் படித்து பட்டம் பெற்று அரசவையின் மகிமையில் ஒளிர்வான் என்று காத்திருந்த இவரது தந்தைக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. ஏனெனில் ஒருமுறை நேப்பிள்ஸ் பகுதியில் மறையுரை ஆற்றிய புனித ஜீலியனின் கருத்துக்களால் அக்குவினாஸ் ஈர்க்கப்பட்டு அவரை சந்தித்து தமது விருப்பத்தை தெரிவித்ததின் மூலம் 18ம் வயதில் சாமிநாதர் சபையில் சேர்ந்து தவ உடை அணிந்தார். பல இன்னல்களுக்கிடையே அவற்றையெல்லாம் வெற்றிகண்டு பிறகு புனித பெரிய ஆல்பர்ட்டிடம் நான்கு ஆண்டுகள் கற்ற பிறகு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

திருத்தந்தை 6ம் அர்பனின் முயற்சியால் முதன் முதலில் நற்கருணை திருநாள் திருச்சபையில் ஆரம்பமானது. எனவே அதற்கு தேவையான திருப்பலி, மாலை ஆராதனை போன்றவற்றை எழுதினார். நாம் நற்கருணை எழுந்தேற்றத்தின்போது பாடும் "மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை" என்னும் பாடலையும் இன்னும் பிற பாடல்களையும் இயற்றினார். ஒருமுறை லயன்சு செல்லும் வழியில் கீழே விழுந்து அதன்மூலம் உடல்நலம் குன்றி 07.03.1274 இறைவனின் பதம் அடைந்தார். திருத்தந்தை 22ம் யோவான் 1323 ஜீலை 18அன்று இவரை புனிதராகவும், திருத்தந்தை 5ம் பத்திநாதர் 14.04.1567 அன்று "அக்குவின் தோமா திருச்சபையின் மறைவல்லுநர்" என்று அறிவித்தார். தூய அக்குவினாசின் கல்வி அறிவும், கவித்திறனும் நம் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பின் பிறப்பிடமே எம் இறைவா, வழிதவறிபோன ஆட்டுக்குட்டியை கண்டுபிடித்து அதை பராமரிப்பதுபோல வழிதவறி பாதை அறியாத எங்களை வழிநடத்த நீர் எமக்கு தந்த திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் ஆகியோரை ஆசீர்வதித்து எங்களை திறம்பட வழிநடத்த தேவையான அருளைத்தர வேண்டி தூய தாமஸ் அக்குவினாஸ் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் சுனையே இறைவா, கத்தோலிக்க கல்வி நிறுவனங்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இந்நிறுவனங்கள் மக்களுக்கு உண்மையான தொண்டாற்றி அதன் மூலம் திருச்சபைக்கும் மற்றும் சமுதாயத்திற்கும் தேவையான மாணவர்களை அளித்திட வேண்டுமென்று தூய தாமஸ் அக்குவினாஸ் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் அமுதமே இறைவா, இன்று நாங்கள் கொண்டாடும் கத்தோலிக்க மறைக்கல்வி நிறுவனங்களின் பாதுகாவலரான தூய அக்குவினாஸ் போல நாங்களும் உண்மையாக உமக்கென்று வாழ்ந்து அதன்மூலம் உமக்கு சாட்சி பகர வரமருள வேண்டுமென்று தூய தாமஸ் அக்குவினாஸ் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**31.01.2016 பொதுக்காலத்தின் 4ம் ஞாயிறு திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று நாம் பொதுக்காலத்தின் 4ம் ஞாயிறு திருவழிபாட்டை கொண்டாடுகிறோம். இன்று உலகெங்கும் இளைஞர்களின் தந்தையும் பாதுகாவலருமான தூய தொன் போஸ்கோவின் விழாவையும் கொண்டாடுகிறோம். இவர் ஒரு மாபெரும் கல்வியாளர். மாணவர்களுக்கு உருவாக்கம் தருவதில் அவர் கையாண்ட உத்திகள் பல. புனித தொன் போஸ்கோ வித்தியாசமான செயல்களை செய்தவர் என்பதற்கு பதிலாக அவர் செய்த ஒவ்வொரு செயலையும் வித்தியாசமாகச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய அணுகுமுறையான இயல்பு, இறை மற்றும் இனிய முறை இவற்றின் வழியாக பல ஆதரவற்ற, திக்கற்ற, ஒதுக்கப்பட்ட ஏழை எளிய இளையோர்களை நல்வழிபடுத்த முடிந்தது. அவர்களுக்காகவே சலேசிய சபையை நிறுவினார். குறுகிய காலத்திலேயே உலகெங்கும் பரவிய இச்சபை இளைஞர் பணியில் அற்புத சாதனைகளைப் படைத்துவருகிறது.

மேலும் இன்றைய திருவழிபாட்டின் வாசகங்கள் நமக்கு தரும் செய்தி: உண்மை எப்போதும் இனிக்காது. எல்லோருக்கும் உண்மையை எடுத்துச் சொல்லி மனம் மாற அழைக்கும் இயேசுவை கொல்ல முயல்கின்றனர். இறைவன் குரலுக்கு செவிமடுக்காமல் இறைவாக்கினரைக் கொல்ல முயலுவோர் தாமாகவே அழிவைத் தேடிக் கொள்வர். இறைவன் அவர்களுடன் இருப்பதால் இறைவாக்கினரை ஒன்றும் செய்யமுடியாது. எதிரிகளால் இறைவனின் தூதரை தோற்கடிக்கமுடியாது. இறைவனையும் இறைதூதரை எதிர்ப்போர் அன்பற்ற, அன்பை அறியாதவர்கள் என்று அன்பின் தன்மையை 2ம் வாசகத்தில் புனித பவுல் எடுத்துரைக்கின்றார். அன்பே இறைவன், அன்பைக் கடைப்பிடிப்போர், அன்பில் நிலைப்போர் இறைமக்கள் என்ற விசுவாசத்தோடு இப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உமது வார்த்தையை உலகுக்கு எடுத்துரைக்க இறைவாக்கினரை ஏற்படுத்துகின்ற இறைவா, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்படியும் மக்களாக நாங்கள் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்
2. மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இயேசுவே உம்மை அறியாத மக்களால் நாங்கள் புறக்கனிக்கப்படும் போது அவர்களை வெறுக்காமல் அவர்களுக்காக மன்றாடும் மனதை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
3. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
4. ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பை அளிக்கும் தாராள மனதை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## தூய தொன் போஸ்கோ நவநாள் செபம்

### 22.01.2016 முதல் நாள் : தொன் போஸ்கோவும் திருச்சபையும்

**சகோ. ஜான் பாக்கியராஜ்**

**பாடல்:** இளைஞரின் தந்தை தொன்போஸ்கோ...

**முன்னுரை:**
தனது வாழ்வையே இறைவனுக்கு ஏற்ற ஒரு வாழ்வாக வாழ்ந்து முறை தவறி வாழ்ந்த தன் தாயையும் இறைவழிபடுத்த முயன்று தோன்றிய பல இன்னல்களை இறைமகிமைக்கென ஒப்புக்கொடுத்து, தன் ஆன்மாவை காத்துக்கொண்டது மட்டுமல்லாமல், தன் தாயின் மனதையும் மாற்றி இறை சித்தத்திற்காகவே தன் உயிரையும் கொடுத்த அருளாளர் லவுரா விகுஞாவின் திருவிழாவைக் கொண்டாடும் நாம், நமது வாழ்வில் இச்சிறுமியைப்போன்று புனிதத்திற்கு முதலிடம் கொடுத்து வாழ கற்போம் என்று உறுதி பூண்டு இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**நவநாள் செபம்:**
அன்பே உருவான எம் இறைவா, உம்மை வாழ்த்திப்போற்றி புகழ்கின்றோம். ஏழை எளிய உள்ளங்களை நல்முறையில் வழிநடத்தவும், அவர்களை உமது அன்பின் அரவணைப்பிற்கு அழைத்துச் செல்லவும், தூய தொன்போஸ்கோவை தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி கூறுகின்றோம். தூய தொன்போஸ்கோவுக்கு இருந்த ஆன்மாவைக் காக்கும் அதே தீராத ஆர்வம் எங்களுக்குள்ளும் பற்றியெறிந்திடவும், எம் ஆன்மாவை காத்து இன்னும் பல ஆன்மாக்களை உம்மிடம் அழைத்து வரவும் நாங்கள் உமது அன்பில் என்றும் வாழ்ந்திடவும் அருள்புரியும். எங்கள் ஆண்டவராம் இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் ...**

### 23.01.2016 இரண்டாம் நாள் : தொன் போஸ்கோ ஒரு புரட்சியாளர்

**சகோ. ரொசாரியோ**

**பாடல்:** இளைஞன் நீ போதும்...

**முன்னுரை:** இறையேசுவில் அன்பு நிறை சகோதரமே, நம் தந்தை தொன் போஸ்கோ ஒரு சாதாரண மனிதர் அல்ல, அவர் செய்த புரட்சியில் இப்போது உலகெங்கும் அவர் சபை நிறுவப்பட்டுள்ளது அவர் வாழ்ந்த காலத்தில் துறவிகள் வீட்டிற்குள்ளே செபமும், தபமும் செய்து கொண்டிருந்தனர். ஆனால் நம் தந்தை தொன் போஸ்கோ செபத்துடன், தங்களின் எதிர்காலத்தை இழந்து சுற்றிக்கொண்டிருந்த இளைஞர்களை மனிதர்களாக மாற்றினார். அவர் இந்தப் புரட்சியை ஆயுதங்கள் கொண்டு சாதிக்கவில்லை. ஆனால் அன்பு என்கின்ற ஆயுதம் ஆழமாக ஊடுருவிச் செல்லக்கூடிய கருவியை பயன்படுத்தினார். அவரை மாதிரியாகக் கொண்டு வாழும் நாமும் இந்த சிறந்த "அன்பு" என்ற கருவியை கொடையாக பெற இறைவனிடம் உருக்கமாக இந்த செபவழிபாட்டில் வேண்டுவோம்.

**நவநாள் செபம்: ...**

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் ...**

### 24.01.2016 மூன்றாம் நாள் : தோள் கொடுக்கும் தொன் போஸ்கோ

**சகோ. பாரதி**

**பாடல்:** உம் சிறகுகள் நிழலில்...

**முன்னுரை:** கவலைகள் நம்மனதில் அலைமோதும்போது. தொல்லைகளெல்லாம் நீங்க துணை நிற்பேன் என்று ஒருவரும் சொல்ல மாட்டார்களா? துன்பங்கள் மறைந்து தன்னம்பிக்கைக்காய் சாய்ந்துக்கொள்ள

ஒரு தோள் கிடைக்குமா? என்று ஏங்கிக்கொண்டிருந்த ஒவ்வொரு பெக்கி நகரின் சாலையோரச் சிறுவனுக்காய் தன் தோளினில் இடம் தந்தவர்தான் இந்த தொன் போஸ்கோ. அன்றுமட்டும்தான் சாலைகளும், அதன் ஓரம் வாழும் சிறார்களுமா? இன்றைய நிலையென்ன? இன்றும் சாலைகள் உண்டு அதன் ஓரம் ஒண்டிக் கொண்டிருக்கும் சிறார்களும், முதியோர்களும் உண்டு. தொன் போஸ்கோவும் உண்டு. ஆம் இன்றைய நவநாள் செபத்தில் நாம் அனைத்து தொன் போஸ்கோ இல்லங்களுக்காகவும், அங்கு வாழும் மற்றும் பயன்பெறும் அனைத்து இளம் உள்ளங்களுக்காகவும் மன்றாடுவோம். ஒவ்வொரு சலேசியரும் தமது பணி என்ன என உணர்ந்து இந்த இலக்கில்லா சிறார்களுக்கு இலக்கை அமைக்க, இலக்காக மாற வேண்டிக்கொள்ளும்.

**நவநாள் செபம்: …**

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் …**

## 25.01.2016 நான்காம் நாள் : தூய தொன் போஸ்கோ இல்லாதவர்களின் இல்லம்

**சகோ. சேவியர் ராஜன்**

**பாடல்:** இறைவன் தந்த இனியவரே…

**முன்னுரை:** தாய் தந்தை இல்லாதவர்க்கு தாயாகவும், நண்பர்களின்றி இருந்த இளைஞர்க்கு நண்பராகவும், தங்க இடம் இல்லாமல் இருந்த சிறுவருக்கு தஞ்சமாகவும், படிக்கவழி இல்லாமல் இருந்த மாணவர்க்கு கல்வியாளராகவும், பிழைக்க வழியில்லாமல் இருந்த பலருக்கு வழியாகவும் மாறியவர் தொன் போஸ்கோ. இல்லாதவர்களின் இல்லமாக மாறிய நம் தொன் போஸ்கோ தந்தையின் திருவிழாவிற்கு தயார் செய்யும் நாம், தொன் போஸ்கோவை போன்று ஆதரவற்றவர்களுக்கு ஆதரவாகவும், இல்லாதவர்களின் இல்லமாகவும் மாறிடுவோம்.

**நவநாள் செபம்: …**

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் …**

## 26.01.2016 ஐந்தாம் நாள்: இறைமையில் வாழ்ந்த தொன் போஸ்கோ

**சகோ. செல்வக்குமார்**

**பாடல்:** இயேசுவே எனக்கொரு ஆசை…

**முன்னுரை:**
உலகத்தில் வாழ்ந்தவர் எல்லாம் இறைமையில் வாழ்ந்தவர்கள் அல்ல. இறைமையில் வாழ்வதும் இறையை அறியாமல் வாழ்வதும் நம் கையில் மட்டுமல்ல, மாறாக அந்த இறைவன் நினைப்பது. ஒவ்வொரு நாளும் நாம் திருப்பலியில் பங்கெடுக்கிறோம் மற்றும் ஒவ்வொரு செயலுக்கு முன்பும் செபிக்கிறோம். இவையே இறைமையில் வாழ்வதற்கு எளிய வழிகள். தொன் போஸ்கோ கடவுள் அவருக்கு கொடுத்த அழைப்பை ஏற்று அதன்படி தன் வாழ்க்கையை வாழ்ந்தார். கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் அழைப்பை ஏற்று நாம் வாழ்கிறோமா? சிந்திப்போம். நமக்கு கடவுள்மேல் உண்மையான பக்தி இருக்கிறதா? நாம் செபிப்பது நமது மனதளவிலா? அல்லது வார்த்தையில் மட்டுமா? தொன் போஸ்கோ இறைமையில் வாழ்ந்தது மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்தார். நாம் இறைமையில் வாழ, அந்த தொன் போஸ்கோவை பின்பற்றி வாழ நமது வாழ்க்கையின்மூலம் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ, அருள்வேண்டி இன்றைய செபத்தில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நவநாள் செபம்: …**

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் …**

## 27.01.2016 ஆறாம் நாள் : மாற்றம் தந்தவர்

**சகோ. ஜான் வில்சன்**

**பாடல்:** இளைஞரின் தந்தை போஸ்கோவே...

**முன்னுரை:** மாற்றமில்லாத வாழ்வு அர்த்தமற்றது. நம் வாழ்வை பிறர்மதிக்க வேண்டுமெனில் மாற்றம் என்ற கருவியை நம் கரங்களில் ஏந்துவோம். நம் மாற்றம் பிறரின் உருமாற்றமாக அமைய வேண்டும். தொன் போஸ்கோவின் மாதத்தில் இருக்கின்ற நாம், ஒவ்வொரு நாளும் பல கோணங்களில் அவரை அவராகவே தியானிக்க முற்படுகின்றோம். அவ்வாறே இன்று தொன் போஸ்கோ மாற்றம் தந்தவர் என்ற தலைப்பிலே சிந்திக்கவும் பின்பு செயல்படவும் நமக்கு அழைப்பு விடப்படுகின்றது. "அப்படி என்ன மாற்றத்தை அவர் கொணர்ந்துவிட்டார்?" அவர் கொண்டு வந்த மாற்றங்கள் ஏராளம் ஏராளம்.

புனிதத்தன்மைக்கு வயது வரம்பு இல்லை என்பதை நிருபித்தவர், உன்னையும் என்னையும் புனிதனாக்க முனைந்தார். வீட்டினுள் வாழ்ந்த குருகுலத்தை வீதியிலே பணிசெய்ய அழைத்தார் என அவர் கொணர்ந்த மாற்றங்களை இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம்.

மாற்றம் இன்றைய சூழலில் அவசிய தேவையாக உள்ளது. "பத்து நல்ல இளையோரை கொடுங்கள், இவ்வலகையே மாற்றிக்காட்டுகிறேன்" என்றார் விவேகானந்தர். இவ்வாறான மாற்றத்தை கொணரவே தொன்போஸ்கோ ஏழைகள் மத்தியில் உதித்தார். நம்மால், ஏன் மாற்றங்களைக் கொணர முடியாது? மாற்றங்கள் நம்மிலே உதயமாகி பிறரில், ஒளிர்ந்திட மாற்றங்களை கொணர்ந்த தொன் போஸ்கோ வழியாக இறையருளை நாடுவோம். பக்தியோடு இச்செப வழிபாட்டில் பங்கேற்போம்.

**செபம்: ...**

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் ...**

## 28.01.2016 ஏழாம் நாள் - நீ இளைஞன் அதுபோதும் எனக்கு

**சகோ. ஹென்றி ஜான்**

**பாடல்:** இயேசுவின் பின்னால்...

**முன்னுரை:** இளைஞர்கள் மத்தியில் இறைவனை பார்த்த இனியவர் தொன் போஸ்கோ. தன் வாழ்நாள் எல்லாம் இளைஞர்களுக்காக வாழ்ந்த உத்தமர் நம் தொன் போஸ்கோ. இளைஞர்களை கண்டால், அதை இறைவனை கண்டதற்கு சமம் என்று தன்னையே மெழுகாய் கரைத்து இளைஞர் சமுதாயத்திற்கு ஒளியை ஏற்றி கலைஞன் தொன் போஸ்கோ இளைஞர்களை தன் அரவணைக்கும் கைகளில் ஏந்தி இறைவன் பாதம் அவர்களை கருணை உள்ளங்களாய் வார்த்து எடுத்தவர் நம் தொன் போஸ்கோ. அவர் உழைத்தது இளைஞர்களுக்கு, அவர் படித்தது இளைஞர்களுக்கு. இப்படி எதைச் செய்தாலும் அதை இளைஞர்களுக்காகவே செய்தவர் தொன் போஸ்கோ. அப்படிப்பட்ட ஒரு உன்னத தூயவரின் திருநாளை கொண்டாடும் நாமும் நமது வாழ்வில் இளைஞர்களுக்காக உழைத்து இறைவனில் இணைந்திட வரம் வேண்டி இத்தருணத்தில் செபிப்போம்.

**செபம்: ...**

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் ...**

## 29.01.2016 எட்டாம் நாள் - ஆன்மாவைத் தேடி

**சகோ. ஜேம்ஸ் ராஜ்**

**பாடல்:** இயேசுவின் கரங்களில் நான்...

**முன்னுரை:** அன்றாடம் இறைவன் நம்மைத்தேடி அலைகின்றார். நம் ஆன்மாவை காக்க தம்மையே தினம் கொடுக்கின்றார். பிறரோடு வாழும் நாம் நம்மை கொடுக்க முன்வருகிறோமா? என்றென்றும்

வாழும் எல்லாம் வல்ல இறைவன் தன் மாட்சிமை விளங்க ஒருவரை தேர்ந்துக்கொண்டார் அவர்தான் தொன் போஸ்கோ. அவர் ஆன்மாவுக்காய் அலைந்து திரிந்தார், பிறர் வாழ்வை ஒளிமயமாக்க தமது வாழ்வையே மெழுகாய் உருக்கிக் கொண்டார். அவர் இன்றும் நம்மில் வாழ நாம் பிறர் ஆன்மாவை காக்கவும், நமது ஆன்மாவை காத்துக்கொள்ளவும் முன்வர வேண்டும்.
**நவநாள் செபம்: ...**

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் ...**

**30.01.2016 ஒன்பதாம் நாள் : நற்கருணை பக்தி**

**சகோ. ஜான் பாக்கியராஜ்**

**பாடல்:** இறைவன் நமது வானகத் தந்தை...

**முன்னுரை:** மனம் பரப்பும் மலர்கள் பூத்துக்குலுங்கினாலும் அதன் மனம் கவர் அழகில் மயங்குபவர் சிலரே அவர்களே கவிஞர்கள். மழை, மின்னல், காற்று, இடி என இயற்கையின் விந்தைகள் எங்கும் இருந்தாலும் அவை பிறப்பிக்கும் வியப்பில் மூழ்குபவர் சிலரே அவர்களே விஞ்ஞானிகள். அதேபோல் இறைவன் நம்மீது கொண்டுள்ள அன்பை எண்ணற்ற வழிகளில் எண்பித்தாலும் அந்த அன்பின் ஆழத்தை உணர்பவர் சிலரே அவர்களே புனிதர்கள். ஆம் இறையன்பின் உச்சக்கட்ட வெளிப்பாடான நற்கருணையின்மீது அளவற்ற அன்பையும் வணக்கத்தையும் செலுத்தி அவரது அன்பின் ஆழத்தை புரிந்துக்கொண்டவர்களுள் ஒருவர் நம் தந்தை தொன்போஸ்கோ. இன்றைய நவநாளில் நற்கருணையின்பால் நமக்குள்ள பக்தியை அதிகரிக்க தொன் போஸ்கோ வழியாக செபிப்போம்.

**நவநாள் செபம்: ...**

**பர-1; அரு-1; தந்தைக்கும் மகனுக்கும் ...**

**தூய தொன் போஸ்கோவின் திருநாள் திருப்பலி**

சகோ. அருண் சகாயராஸ்

**முன்னுரை**
இறையரசின் போதனைகளை இம்மண்ணில் விதைக்க பல்வேறு காலக்கட்டங்களில் தூய ஆவியால் அனுப்பப்பட்ட எண்ணற்ற புனிதர்களில் 19ம் நூற்றாண்டின் இறையேசுவின் இணையற்ற அன்புச் சேவகன்தான் நம் புனிதர் தூய தொன்போஸ்கோ. அர்த்தமுள்ளதாக்க அவரது திருநாளைக் கொண்டாடும் நாம், நம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க தேவையான வழிமுறைகளைத் தேடுகின்றோமா? வாருங்கள் இறையேசுவின் துணையோடு நம் நண்பர் தொன்போஸ்கோவின் வழிநடத்தலுக்கேற்ப வாழ்வில் அர்த்தம் இழந்தவர்களுக்காக போராடுவோம். சிந்திப்போம். வாழ்க்கையில் புது திருப்பங்கள், புது மதிப்பீடுகள் இளைஞர்களின் மத்தியில் கொணர்ந்த தொன் போஸ்கோவின் வாழ்விலும் துன்பங்களைச் சுமந்து இளைஞர்களுக்காகவே வாழ்ந்தவர் என்பதை நினைவில் கொள்வோம். இறையேசுவின் வழிநடத்துதலும், இறையன்னையின் ஆசீரும் நம் வாழ்வில் நிகழ வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. "உணவுக்காக பசித்திருப்போரைவிட உலகில் அன்பிற்காக பசித்திருப்போர் அதிகம்" பேரன்பின் பரம்பொருளே எம் இறைவா, உமது அன்பை உலகெங்கும் வெளிப்படுத்த உமது திருச்சபையை ஏற்படுத்தினீர். திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் துறவறத்தார் அனைவரையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் யாவரும் உம்வழி நடந்து அன்பை உலகெங்கும் பரப்பும் கருவிகளாக விளங்க தூய தொன் போஸ்கோ வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. பராமரிக்கும் பாதுகாவலரே எம் இறைவா, உலகில் அராஜகம், வன்முறை, கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் மற்றும் தீவிரவாதம் மலிந்துள்ள எம் சமுதாயத்தினை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இந்தியாவில் பல்வேறு பகுதியில் வன்முறைகளுக்கு உள்ளாகும் உமது விசுவாசிகளுக்காக மன்றாடுகிறோம். நீரே அவர்களுடனிருந்து தீயவழியில் செல்லாமல் உமது

பாதையில் வழிநடக்கப் போதுமான மனதிடனையும், ஆதரவையும் அளித்து தொடர்ந்து உமது விசுவாசத்தில் வேரூன்றியர்களாக வாழ வழிநடத்திட வேண்டுமென்று தூய தொன் போஸ்கோ வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தந்தையும், தாயுமான எம் இறைவா, இறையன்பிலும் தியாகத்திலும் வழிகாட்டிகளாய் வழிநடத்திவரும் எங்கள் பெற்றோர், ஆசிரியர் மற்றும் நண்பர்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். நீரே அவர்களுக்கு நல்ல உடல்உள்ள நலன்களை தந்து தொடர்ந்து உமது வழியில் நடத்திச்செல்ல போதுமான ஆற்றலையும் அருளையும் நிறைவாகப் பொழிந்திட வேண்டுமென்று தூய தொன் போஸ்கோ வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிநடத்தும் எம் இறைவா, எம் நாட்டிலுள்ள அனைத்து இளையோரையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் தங்கள் வாழ்வின் மேன்மையை உணர்ந்து தீய நாட்டங்களுக்கு இடம் கொடாமல், நாளைய மனிதாபிமான தலைவர்களாக உருவாகிடவும், அதற்கு தடையாக இருக்கும் அனைத்தையும் தகர்த்தெறிந்து விடுவித்திட வேண்டுமென்று தூய தொன் போஸ்கோ வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நற்கருணைக்குப்பின் செபம்**

எம் உள்ளத்தில் எழுந்தருளிய எம் நாயகனே, உம்மையே தந்து வழிநடத்தியமைக்கு நன்றி கூறுகின்றோம். உம்மைப் பின்பற்றி வாழவும் பிறர் வாழ்வுக்கு விளக்காய் அமையவும், எம் ஆன்ம ஈடேற்றத்தில் தொன் போஸ்கோவைப்போன்று அக்கறைக்கொண்டு வாழவும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**பாடல்:** வாழ்க தூய தொன் போஸ்கோ...

## பகுதி - 2 : விசுவாசத்தில் வளர...

### 2016 புத்தாண்டு தரும் வாக்குறுதிகள்

திரு. லூயிஸ் சகாயராஜ்

வாழ்வை நலன்களால் நிரப்பும் ஆண்டவர் மேலும் ஓர் ஆண்டைக் காண நமக்கு வாய்ப்பளித்துள்ளார். இப்புதிய ஆண்டு 2016, நமக்கு பலவாக்குறுதிகளை தந்து நம்மை வரவேற்கின்றது. இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள நாம் ஆண்டு முழுவதும் இறைவனின் அளவில்லா இரக்கத்தால் வழிநடத்தப்பட வாழ்ந்து காட்டிட நம்பிக்கையுடன் இரக்கத்தின் ஆண்டவரிடம் அருள் வேண்டுவோம்.

1. இரக்கமுடையோர் பேறுபேற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். (மத் 5:7).
2. நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பார் (லூக் 6:45).
3. உங்கள் தலைமுடி எல்லாம் கூட எண்ணப்பட்டிருக்கின்றன அஞ்சாதீர்கள், சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் (லூக் 12:7).
4. நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர் (யோவா 13:35).
5. விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் (மத் 7:11).
6. உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள் (யோவா 16:33).
7. நாம் கடவுளின் கைவேலைப்பாடுகள், நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கின்றோம் (எபே 2:10).
8. என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன், மதிப்பு மிக்கவன், நான் உன்மேல் அன்பு கூர்கின்றேன். (எசா.43:4).
9. நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன், ஆயினும் பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக்கொள்வேன் (எசா 54:7).
10. உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் (ஓசே 6:6).
11. உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவர்தாமே கற்றுத்தருவார், உன் பிள்ளைகள் நிறைவாழ்வு பெற்றுச் சிறப்புறுவர் (எசா 54:13).

12. தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார் (யோவா 3:16).

நம் வானகத் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல் நாமும் நம் வாழ்வில் இரங்கும் மக்களாக நமது பாவ-துயர-பலவீன-பிடிவாத நிலையிலிருந்து மனமிரங்கும் மக்களாக வாழ்வோம். இறைவன் வாக்களித்த நல்வாழ்வை உரிமையாக்குவோம்.

## பொங்கல் திருவிழாவின் கிறிஸ்தவ பொருள் என்ன

திருமதி. ராணி வில்சன்

**இறையேசு:** பயிர் விளைந்ததும் அவர் அரிவாலோடு புறப்படுகிறார். ஏனெனில் அறுவடைக்காலம் வந்துவிட்டது (மாற்கு 4: 29).

**திருவள்ளுவர்:** உழவர் உலகத்தாருக்கு ஆணி அ.்.து ஆற்றாது
எழவாரை எல்லாம் பொறுத்து.

**விளக்கம்:** உழுதொழில் செய்யும் வலிமை இல்லாது பிற தொழில் செய்கின்றவரையும் தாங்குவதால் உழவர் உலகத்தாருக்கு அச்சாணி போன்றவர்.

**வள்ளலார்:** வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்.

**முகவுரை**

உலகை தன் இன்னுயிரால் மீட்டு விடுதலைகொடுக்க, கடவுள் மனிதனாக பிறந்த மாதத்தை கொண்டாடிவிட்டு புதிய வருடத்திற்குள் முதல் மாதத்தில் நுழைந்துள்ளோம். இந்த அறுவடை நாளை பொங்கல் விழாவை கொண்டாட நமக்கு தகுதியுள்தா என சிறிது சிந்திக்க வேண்டும். "நான் மீண்டும் பூமிக்கு வருவேன்" என்பதைத் தெளிவாகச் சொல்லி அப்படி வரும்போது அதுவே உலகின் இறுதியாக இருக்கும் எனவும், இறை இயேசு வரும்போது அவரை வரவேற்கும் தகுதியுடன் நாம் இருக்க வேண்டும். என ஓர் உவமையைச் சொல்லி அதன்படி வாழ நம்மை அழைத்தார். (மத் 25: 31-46)

சென்ற ஆண்டு சென்னையையே புரட்டிப்போட்ட வெள்ளம் நமக்கு நல்லதொரு பாடத்தை சொல்லிவிட்டு சென்றுள்ளது. இயற்கையின் எல்லா பக்கங்களையும் தெரிந்து கொண்டு அதை கட்டுப்படுத்த துடிக்கிறான் மனிதன். ஆனால் அவன் அறிவுக்கு எட்டாத கட்டுப்படாத அம்சமாக இயற்கை உள்ளது. மிக முக்கியமாக மனிதனின் அகந்தையைத் தன் பிரமாண்டத்தாலும், விடைகாண இயலாத ரகசியங்களாலும், சுக்கு நூறாக்கி விடுகிறது. இயற்கை கடவுளின் சேவகன் என்பதையும் அது அவருக்கே கட்டுப்படும் என்பதையும் அறிந்தும், அறியாமலும் அதனுடன் மோதுகிறான் மனிதன். (மத் 8:23-27)

உலகெங்கிலும் பெருவெள்ளம் பற்றிய 500க்கும மேற்பட்ட பழங்கதைகள் உள்ளன. நோவா, கில்காமேசு, மனுவும் காசாமீனும் போன்ற இன்னும் மற்ற இந்திய, சீனா, பாபிலோனியா வேல்சு, ரஷியா, அமெரிக்கா, அவாய், ஸ்காண்டிநேவியா, சுமத்ரா, பெரு, பாலினேசியா ஆகிய எல்லா கதைகளும் நமக்கு எச்சரிக்கைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன ஆனால் நாம் என்ன செய்தோம்.

ஆறு, ஏரி, குளம் போன்ற நீர் நிலைகளில் ஓடும் நீரின் வேரை அறுப்பது மட்டும் பாவம் அல்ல. நிலத்தடிக்குள் ஓடும் நீரின் வேரை அறுப்பதும் பாவம். பூமி என்பது உயிரற்ற பொருள் அல்ல. அது உயிருள்ள ஜீவன். அது பஞ்சபூதங்களையும் உள்ளடக்கிய ஓர் உயிரினம். பஞ்சபூதங்களில் முக்கியமானது தண்ணீர். குறிப்பாக நன்னீர் பூமிக்கு அவசியம் தேவை. தண்ணீர் இல்லாமல் போனால் பூமி எனும் உயிரினம் செத்துவிடும். செயற்கை சோதித்து பார்த்தால் பூமிப்பந்து மூச்சுவிட்டு சுவாசிப்பதை மெல்லிய அதிர்வுகளாக உணரமுடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

நன்னீரைத் தரும் சதுப்பு நிலங்களை அழித்து சாகடித்துவிட்டோம் (பள்ளிக்கரணை)
தூத்துக்குடியில் மூன்று வகை சாகுபடியில் இரண்டு வகை முற்றிலும் அழிந்துவிட்டன. கன்னடியிலன் கால்வாயின் பாசனத்தில் 2 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் கருகிவிட்டன.
தென்காசியில் 1000 ஹெக்டர் கடலை சாகுபடி அழிவு
சேரன்மாதேவியில் 2ஆயிரம் ஏக்கர் அழிவு
தமிழகம் முழுவதும் விளைநிலங்கள், நீர் நிலைகள் ஆக்ரமித்து அழிவு

இது ஒரு உதாரணம்தான். நிறைய கூறலாம் ஊருக்கெல்லாம் சோறிட்ட கைகள் இன்று அகதிகளாக இடம்பெயர்ந்தும், உள்ளூரில் அவமானம் என வேறு ஊர்களில் மதுபானக் கடைகளில் மேசையைத் துடைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு தண்ணீர் தர மறுத்து, பன்னாட்டு நிறுவன முதலாளிகளுக்கு தண்ணீர் தருகிறோம்.

விஞ்ஞானம், அறிவியல், புதிய தொழில்நுட்பம் இல்லா காலங்களில் மக்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதிப்பில்லாமல் ஆறுகளையும், குளங்களையும், கால்வாய்களையும் அமைத்து தண்ணீர் தேக்கி, அபாயம் எழும்போது தானாகவே எச்சரிக்கை கொடுத்து மக்களை காப்பாற்ற அறிவு நுட்பமான மண்டபங்களையும் கட்டினார்கள். பருவநிலை மாற்றம் மட்டுமல்ல, நாம் செய்த தவறும்தான் இறைவன் மன்னிப்பார் ஆனால் இயற்கை மன்னிக்காது.

எல்லாம் நமக்கு கொடுத்த அறிவுரைகள் மேலும் லேவி 23:1-44வரை நமக்கு கொடுத்த பொக்கிஷங்கள். சமய விழாக்களை நாம் எப்படி எந்தெந்த வழிகளில் வகைகளில் கையாண்டு கொண்டாட வேண்டும் என்பதை தெளிவாக எடுத்துரைக்கிறது. (மத் 13: 1-44, மத் 12:1-8, மத் 20: 1-16)

புனித இடங்களில் கூட வேண்டும்
குடும்பமாக கூட வேண்டும்
இறைவனைப் போற்றி முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்
சுயநலம் தவிர்த்து பொதுநலம் பேண வேண்டும். (லேவி 23:22)
உழைத்த விவசாயி, கூலித்தொழிலாளி, பெண்கள் சமஉரிமை, சமக்கூலி ஓய்வு பெற வேண்டும்
ஓய்வு எடுக்க இல்லம் வேண்டும்
எல்லாம் செய்ய மனித நேயம் வேண்டும்

இறையேசுவின் பொன்மொழிகளில் ஒன்று "அறுவடையோ மிகுதி வேளையாட்களோ குறைவு" இது வெறும் இறைப்பணிக்காக மட்டுமல்ல.

பலனை ஒருசிலர் மட்டும் அனுபவிப்பது பலன் தேவையில் உழல்வோருக்கு சென்றடையவில்லை என்பதையும் நமக்கு உணர்த்துகிறது. இவ்விழாவை அர்த்தமுள்ளவிதத்தில் கொண்டாட வேண்டுமென்றால்

வரலாறு பொங்க வேண்டும்
மனித வரலாறு பொங்க வேண்டும்
வாழ்க்கை பொங்க வேண்டும்
சமத்துவமும் சமவளமும் பொங்க வேண்டும்

அன்போடும், ஆதரவோடும், இரக்கத்தோடும், ஈகையோடும் உண்மையோடும், ஊற்றாகவும், எழுச்சியோடும், ஏற்றமிகு செயல்களோடும் ஐயமின்றி, ஒற்றுமையில் நிலைத்து, ஓர் அங்கமாய் சங்கமித்து மகிழ்வோடு கொண்டாடுவோம்.

## தூய பிரான்சிஸ்கு சலேசியார்-வாழ்வும் பாடமும்
## (இதழியலார் மற்றும் எழுத்தாளர்களின் பாதுகாவலர்)

திரு. I ஜான் சுரேஷ்

இயல்பிலேயே பொறுமைசாலியான பிரான்சிஸ் சலேசியார் பிரான்ஸ் நாட்டில் 1567 ஆகஸ்ட் 21 அன்று பிறந்தார். பிரான்சிஸ் தே பாய்சி மற்றும் பிரான்சிஸ் தே சியோனாஸ் ஆகியோருக்கு 13 பிள்ளைகளுள் மூத்த மகன் இவர். 13 ஆண்டுகள் தனக்கு குருவாக பணியாற்ற அழைப்பு இருப்பதை யாருக்கும் தெரிவிக்காமல் இருந்தார். போர் வீரனாக வேண்டும் என்று இவரது தந்தை கூறியபோது அதற்கும் மறுப்பேதும் கூறவில்லை. சட்டம் படித்தபோதும் சரி, இறையியல் கற்றபோதும் வாள் சண்டையில் முன்னேறிய போதும் தனது தனிப்பட்ட செப வாழ்வில் வளர்ச்சி கண்டாரேயன்றி தந்தையிடம் ஏதும் கூறவில்லை. ஏனென்றால் தமது விருப்பம் என்பதைவிட எப்போது அழைத்தலை நான் ஏற்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ அப்பொழுதுதான் செல்ல வேண்டும் என்று நினைத்திருந்தார்.

குதிரை ஓட்டுவதில் தேர்ச்சி பெற்றிருந்த பிரான்சிஸ் மூன்று முறை கீழே விழுந்தார். அப்போது தனது வாளும் அது இருந்த உறையும் தரையில் தனித்தனியாக அல்லாமல் சிலுவை அடையாளமாகவே ஒவ்வொருமுறையும் கிடந்தது. இதை இறைவனின் அடையாளமாக கருதி தந்தையிடம் தனது

விருப்பத்தை கூறினார். ஆன்மீகத்தில் இவர் கொண்டிருந்த வளர்ச்சியை கண்ட ஆயர் "இவர் உண்மையிலேயே இறையனுபவம் கொண்டவர்" என்று கூறி குருவாகத் திருநிலைப்படுத்தினார். "குருத்துவ மாண்பே மற்ற உலகப் பதவிகளைவிட மேன்மையானது" என்று பிரான்சிஸ் தெளிந்த பார்வையுடன் பணியைத் தொடங்கினார்.

கால்வின் சபையினர் கிறிஸ்தவர்களைத் தம் வசமாக்கியிருந்த சூழலில் கிறிஸ்தவர்களை மீண்டும் கத்தோலிக்க சபைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தார். ஆனால் அதில் எந்த ஒரு பயனும் ஏற்படவில்லை. ஒரு முன்னேற்றமும் ஏற்படாததால் தமது மறையுரையை தாளில் எழுதி கையாலே பல பிரதிகள் எடுத்து ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் போட்டார். மாற்றம் இல்லை. இவரது முயற்சியால் 40,000 பேர் கத்தோலிக்க மதத்திற்கு திரும்பி வந்தார்கள்.

"மிக மோசமான பாவம் என்பது மற்றவர்களைத் தீர்ப்பிடுவதும், புரணிபேசுவதும்" என்று, பிரான்சிஸ் தினந்தோறும் 50க்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி அதன் வாயிலாக பலரை நெறிப்படுத்தினார். "புனிதம் என்பது துறவு வாழ்வு மேற்கொண்டவர்களுக்குத்தான் என்றிருந்த நிலையை மாற்றி அது சாமானியர்களுக்கும் உரியது" என்பதை தமது "புனித வாழ்விற்கான முன்னுரை" என்னும் நூலில்1608ல் அழுத்தமாக பதிவு செய்தார்.

"உமது பார்வையை தியானத்தின் வழியாக கடவுள் பக்கம் திருப்பினால் உமது முழு ஆன்மாவிலும் கடவுள் நிறைந்திருப்பார். அனைத்து செயல்பாடுகளையும் கடவுள் பிரசன்னத்திலிருந்தே ஆரம்பி என்று மொழிந்த பிரான்சிஸ் தனது அருகிலிருந்த அருட்சகோதரியிடம் "தாழ்ச்சி" என்னும் வார்த்தையை கடைசியாக சொல்லிவிட்டு 1622 டிசம்பர் 28 அன்று உயிர் நீத்தார். 08.01.1661ல் அருளாளர் நிலைக்கும், 08.04.1665-ல் அன்று புனித நிலைக்கு திருத்தந்தை ஏழாம் அலெக்சாண்டர் உயர்த்தினார். 1877 நவம்பர் 16 அன்று மறைவல்லுநர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

## தொன் போஸ்கோ இன்று தரும் பாடங்கள்

திரு. ஜான் அலெக்சாண்டர்

இரண்டு கைதிகள் சிறையின் கம்பிகள் வழியாக வெளியே பார்த்தனராம். ஒருவன் மண் தரையும் மற்றொருவன் வானத்தில் உள்ள நட்சத்திரங்களையும் பார்த்தாராம். ஒரு இடத்தை பார்க்கும்போது நம் ஒவ்வொருவருக்கும் ஒரே காட்சியானது வெவ்வேறாக தோன்றும். தொன் போஸ்கோவும் தன்னுடைய இளையோர் பணியை பார்க்கும்போது 4 வெவ்வேறு கோணங்கள் அவருக்கு தெரிந்தது. அவை: 1) இல்லம் 2) பள்ளி 3) விளையாட்டு திடல் 4) ஆலயம். ஆனால் அவர் இந்த நான்கையும் சமமாகவே இருப்பதை உணர்கின்றார். இளையோரின் பராமரிப்புக்கு இந்நான்கு முறைகளும் அவருக்கு உதவியாக இருந்தது. ஒரு மாணவன் எப்போதும் ஆலயத்திலேயே இருந்துவிட்டு விளையாட்டிலோ மற்றவைகளிலோ கவனமின்றி இருப்பதை பார்த்தால் தொன் போஸ்கோ உடனே அவனை அணுகி அவனுக்குள்ள பிரச்சனையை கண்டறிவார். அதேப்போல ஒருவன் தனிமையிலேயே இருந்துகொண்டு மற்றவைகளில் ஈடுபாடில்லாமல் இருந்தால் உடனே தொன் போஸ்கோ அவனுடைய நண்பர்களை அழைத்து பேசி அவனுக்குள்ள பாதிப்பை சரிசெய்வார். ஆகவே ஒரு மாணவனுக்கு பள்ளிகூடம், ஆலயம், விளையாட்டுதிடல் மற்றும் இல்லம் மிக அவசியம் என்பதை நன்கு உணர்ந்தவர் தொன் போஸ்கோ. அது எல்லா காலத்திற்கும் ஏற்ற பாடமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அந்த பாடங்களை நாம் தெரிந்து கொள்வோமா..

1) **இல்லம்:** பாதுகாப்பு, அரவனைப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை இளையோர்களின் எதிர்ப்பார்ப்பு. அவர்களுக்கு இந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் எளிதாக நாம் அவர்களின் நம்பிக்கையை பெற்று அதன் வழியாக அவர்களை முன்னேற்ற பாதையில் அழைத்து செல்லமுடியும்.

2) **பள்ளி:** தொன் போஸ்கோவின் பார்வையில் பள்ளி என்பது கல்வி கற்றல் என்பதற்கும் மேலான ஒன்று. உள்ளத்தை தொடுகிற ஒன்றாகவும் உறவுகளின் கூட்டமைப்பாகவும் பள்ளி இருக்க வேண்டும். ஒரு மாணவன், தான்யார்? தன்னுடைய சிறப்பு என்ன? என்பதெல்லாம் அறிந்து புரிந்து கொள்ளும் ஒரு இடம் தான் பள்ளி. புத்தக அறிவைவிட வாழ்வின் நெறிமுறைகளை கற்று தேர்ந்துகொள்ளும் இடமும் அதுவே. அதேபோல ஆசிரியரானவர், சில நேரம் கற்பிப்பவராகவும் சில நேரம் செவிமடுப்பவராகவும் இருத்தல் வேண்டும் என்பதை தொன் போஸ்கோ உறுதியாக சொல்லுவார். இதனால் மாணவர்களை தெளிந்த உள்ளமும் ஆழ்ந்த ஞானமுள்ளவர்களாகவும் உருவாக்க முடிகிறது.

3) **ஆலயம்:** சலேசிய ஆரட்டரிகளில் பெரும்பாலும் ஆலயமானது விளையாட்டு திடல் அருகாமையில் இருப்பதை நாம் பார்க்கலாம். விசுவாசம்-விளையாட்டு இரண்டும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டது என்பதை தொன் போஸ்கோ நன்கு அறிந்தவர். விளையாடும் போது கூட இடைவெளி நேரத்தில் ஆலயத்தினுள் ஒரு குட்டி விசிட் அடித்துவிட்டு மீண்டும் விளையாட்டை தொடரும் பழக்கத்தை தன் மாணவர்களிடம் வித்திட்டவர் தான் தொன் போஸ்கோ.

4) **விளையாட்டு திடல்:** உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு, பொழுதுபோக்குகளினால் இளையோர் தங்களுடைய சக்தியை இவ்வுலகில் பதிவு செய்தாக வேண்டும். இளையோருடன் இளமையாக இருக்க வேண்டும் என்று தொன் போஸ்கோ தன் பணியாளர்களிடம் சொல்லி தொடர்ந்து ஊக்குவித்து வந்துள்ளார். பணி மற்றும் விளையாட்டு இரண்டிற்கும் சமமான நிலையை எதிர்ப்பார்ப்பவர் தொன் போஸ்கோ. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் மற்றும் விளையாட்டுகளில் இருந்து ஒதுங்கிவிட்டு வெறும் வேலையிலும் ஆன்மீகத்திலும் ஈடுபாடு செலுத்தும் இளையோரை தொன் போஸ்கோ ஒருபோதும் ஊக்குவித்ததில்லை. மாறாக எப்போதும் இந்த 4 முறைகளிலும் சமமான வகையில் இவர்கள் நடந்துகொள்ளவே பாடுபட்டார்.

ஆகவே பள்ளிகூடம், ஆலயம், விளையாட்டுதிடல் மற்றும் இல்லம் என இந்த 4 வழிகளை நாம் நன்றாக கவனித்தால் இது அக்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திற்கும் பொருந்தும் பாடமாக அமைந்திருப்பது தெளிவாகும். இன்று உலகம் போகும் போக்கில் குறி வைத்து சீரழிக்கப்படுபவர்கள் இளம் பருவத்தினரே. இளையோரை சிந்திக்க விடாமல் சிறந்த மேதைகளாக உருவெடுக்கவிடாமல் சமுதாயத்தில் சுயநல கும்பல்கள் கொழுத்து திரிகின்றன.

தொன் போஸ்கோ பாதையோரத்து மலர்களை பரிவோடு பேணிக்காத்தவர். கொட்டிக் கிடந்த செங்கற்களை தேவாலயங்களாக மாற்றியவர். இன்றும் அவரது பணி தொடருகின்றது. தொன் போஸ்கோவின் தத்துவங்கள் நவீன உலகிற்கு மிகவும் பொருத்தமானவை. இதுவும் நமக்கு அவர் தரும் பாடம். அதாவது கடவுள் உன்னைப் பார்க்கின்றார். ஆடு, பாடு, விளையாடு ஆனால் பாவம் மட்டும் செய்யாதே.

புனித தன்மை அடைவது மிகவும் எளிது. ஊடலை வருத்திக் கொள்ளவோ, நோன்பிருக்கவோ, நீண்ட நேரம் செபிக்கவோ தேவையில்லை. மாறாக பள்ளியிலும், வீட்டிலும், வேலை நேரங்களிலும் உன் கடமையை சரிவர செய். மனம் ஒவ்வாத தட்ப வெப்ப நிலை, உடல் நோய்கள், எதிர்பாரா துன்பங்கள், வருத்தங்கள் போன்றவற்றை ஏற்று வாழ். இவைகள் உன்னை புனிதராக்கும் என்ற தொன் போஸ்கோவின் கூற்றை நினைவில் கொள்வோம். நாமும் புனிதர்களாக மாறுவோம்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.

1. தொடங்கியுள்ள இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டையொட்டி 2016ம் ஆண்டு சனவரி முதல் தேதி கொண்டாடப்படும் இறைவனின் அன்னை மரியா திருநாளன்று புனித மேரி மேஜர் பசிலிக்காப் பேராலயத்தின் புனிதக் கதவை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திறந்துவைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2. தமிழகத்தில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுடன் ஒருமைப்பாட்டுணர்வைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ள இந்திய ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் Baselios Cleemis அவர்கள், அடுத்த சில நாள்களில் காரித்தாஸ் இந்தியா பத்தாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்கு திட்டமிட்டுள்ளது என்று கூறியுள்ளார். பள்ளிகள், ஆலயங்கள், மசூதிகள், திரையரங்குகள் என 4500க்கும் மேற்பட்ட இடர்துடைப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3. இன்றைய உலகில் கிறிஸ்துவை அறியாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, திருஅவையின் சவால்களை அதிகரித்து வருகின்றது. உலகின் எழுநூறு கோடி மக்களுள் 17.7 விடுக்காட்டினரே கிறிஸ்தவர்கள் என்றும், மறைப்பணித் தளங்களின் பல்வேறு பகுதிகளில் திருமுழுக்குப் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும் கூறினார் கர்தினால் Filoni.

4. திருவிவிலியத்தை தலைசிறந்த ஓர் இலக்கிய படைப்பாக நோக்காமல், கடவுள் பேசுகின்ற ஒரு புத்தகமாக நோக்கி அதனை வாசிக்க வேண்டும் என்று இளையோரைக் கேட்டுக்

கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மகாத்மா காந்தி அவர்கள் விவிலியம் பற்றிச் சொன்னபோது, இப்புவிக்கு அமைதியைக் கொண்டுவர தேவையான அனைத்தையும் கொண்டிருக்கும் ஓர் ஏட்டை கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ஓர் இலக்கியம் போன்று நோக்குகின்றீர்கள் என்று கூறியதைக் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

5. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சிறார்க்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு, "அன்புள்ள திருத்தந்தை பிரான்சிஸ், உலகின் சிறார்க்கு திருத்தந்தையின் பதில் கடிதங்கள்" என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவர உள்ளது. சிரியா, சீனா, கென்யா, அல்பேனியா உட்பட 26 நாடுகளிலிருந்து ஆறு வயதுக்கும் 13 வயதுக்கும் உட்பட்ட ஏறக்குறைய 259 சிறார் திருத்தந்தைக்கு பல தலைப்புகளில் கேள்வி கேட்டு கடிதம் எழுதியிருந்தனர். இந்நூல் வருகிற மார்ச் மாதத்துக்குள் தயாராகிவிடும் என்று கூறப்பட்டுள்ளது. இச்சிறார் திருத்தந்தைக்கு கைப்பட எழுதிய 31 கடிதங்களுக்கு திருத்தந்தையே தனது கைப்பட பதில் எழுதிய கடிதங்களை ஒன்றாகச் சேர்த்து இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

*இந்த யூபிலி ஆண்டினை பொருளுள்ள வகையில் கொண்டாட அர்த்தமுள்ள சில பரிந்துரைகளை முன் வைக்கும் திருத்தந்தையின் மடல்:*

## (MISERICORDIAE VULTUS) மிசரிகோர்தியே வுல்த்துஸ்

1. **ஒப்புரவு அருளடையாளம்:** இந்த அருளடையாளத்தில்தான் இணையில்லா இறை இரக்கத்தை நாம் ஆழமான விதத்தில் அனுபவிக்கிறோம். இறைவனின் மன்னிப்பு நம்மைப் புது மனிதர்களாய் மாற்றுகிறது. எனவே ஒப்புரவு அருளடையாளத்தை வழங்கும் அருள்பணியாளர்களை இறை இரக்கத்தின் உண்மையான அடையாளங்களாய் விளங்கத் திருத்தந்தை அழைக்கிறார்.
2. **இரக்கத்தின் மறைப்பணியாளர்கள்:** திருச்சபையினுடைய தாய்மைப் பண்பின் பிரதிப்பலிப்பாக இப்புனித ஆண்டில் திருத்தந்தை தாம் மட்டுமே மன்னிக்ககூடிய பாவங்களையும் மன்னிக்கும் அதிகாரத்துடன் இரக்கத்தின் மறைப்பணியாளர்களை அனுப்ப திட்டமிட்டிருக்கிறார்.
3. **இரக்கத்தின் வாயில்:** வழக்கமாக உரோமை நகரின் நான்கு பேராலயங்களின் திருக்கதவுகளும் யூபிலி ஆண்டுகளில் திருப்பயணிகள் நுழைந்து யூபிலியின் நிறை பேறுபலனை பெற திறக்கப்படும் யூபிலி வரலாற்றில் முதல் முறையாக இந்த ஆண்டு மறைமாவட்ட பேராலயங்கள் மற்றும் திருத்தலங்களிலும் திருவாயில்கள் திறக்கப்படும்.
4. **திருப்பயணங்கள்:** நமது மனமாற்றத்தின் உந்து சக்தியாகத் திருப்பயணங்கள் உதவ வேண்டும் என திருத்தந்தை விரும்புகிறார். எனவே உரோமை நகரின் திருக்கதவையோ அல்லது உலகின் வேறு பகுதிகளில் உள்ள திருத்தலங்களின் திருக்கதவை அடையும் அடையாளமாக ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற விதத்தில் திருப்பயணம் மேற்கொள்ளலாம்.
5. **இரக்கத்தின் ஆன்மீக, சமூகக் கடமைகள்:** இறை இரக்கத்தைப் பகிர்ந்துக்கொள்ளச் சிறந்த வழி இரக்கத்தின் கடமைகளுக்கான நமது பிரமாணிக்கத்தைப் புதுப்பித்துக் கொள்வதாகும்.

**5. அ. இரக்கத்தின் ஆன்மீக கடமைகள் பின்வருமாறு**

1. அவநம்பிக்கையில் இருப்போருக்கு ஆலோசனை வழங்குதல்
2. அறியாமையில் இருப்போருக்கு அறிவொளியூட்டுதல்
3. பாவிகள் மனம்மாற அறிவுறுத்தல்
4. துன்புறுவோரைத் தேற்றுதல் வருந்துவோருக்கு ஆறுதல் அளித்தல்
5. பிறர் இழைத்த தவறுகளை மன்னித்தல், தீமைகளை மன்னித்தல்
6. தீமை செய்வோரைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளுதல்
7. இறந்தோருக்காகவும் வாழ்வோருக்காகவும் செபித்தல்

**ஆ. இரக்கத்தின் சமூகக் கடமைகள் பின்வருமாறு**

1. பசியாய் இருப்பவர்களுக்கு உணவு கொடுத்தல்
2. தாகமாயிருப்போரின் தாகம் தனித்தல்
3. ஆடையின்றி இருப்பவர்களுக்கு ஆடை அணிவித்தல்
4. அந்நியரை ஏற்றுக்கொள்ளுதல்

5. நோயாளர்களைக் குணப்படுத்துதல்
6. சிறையிலிருப்போரைச் சந்தித்தல்
7. இறந்தோரை நல்லடக்கம் செய்தல்

**இயற்கை பேரிடர் மேலாண்மை**

இயற்கை பேரிடர்களிலிருந்து காத்துக்கொள்ள சிறப்பான பயிற்சி, ஆங்கிலம், தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் கற்றுத்தரப்படும். பள்ளி, கல்லூரி, நிறுவனங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அனைத்து தரப்பினரும் பயிற்சிபெற தொடர்பு கொள்ளவும்.

அ. இம்மானுவேல் ஜெயராஜ்
கைபேசி எண்: 9789036112.

## NATURAL DISASTER MANAGEMENT

To safeguard ourselves and to mitigate the loss from all sorts of natural and man made disasters proper training given in Tamil, English, and Hindi for school, college students, staff of Public and Private sectors.

**Contact:**
Mr. A. Emmauel Jayaraj.
Cell No: 9789036112.

**சுடர் வாசகப் போட்டி 18 முடிவுகள்**

1. அன்பினால் தனது ஒரே பேரான மகனையே கையளிக்கும் அளவுக்கு இரக்கம் மிகுந்த இறைத்தந்தையே
2. ஸ்பெயின் தேசத்தில்
3. கடுங்காய்ச்சலால் 1552 ஆண்டு டிசம்பர் 2ஆம் நாள் இறந்தார்
4. இறைவாக்கினர்களான எசாயா, எரேமியா, தானியேல்
5. தூய அம்புரோஸ்
6. தூய அம்புரோஸ்
7. 1854ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள், திருத்தந்தை 9ஆம் பத்திநாதர்
8. திருமுழுக்கு யோவான்
9. ஆறு மாதம் பெரியவர்
10. அன்னை மரியாளையும், அவர் கணவர் தூய யோசேப்பையும் குறிக்கிறது.
11. தொ.நூ.12:2
12. 2ஆம் யோவான் பவுல், 1981 மே 9ஆம் நாள்
13. தூய ஆவி பெருவிழாவிற்கு முந்தின ஞாயிறு மே 8ஆம் நாள்
14. பரிபுரண பலனை பெறுவார்கள்
15. ஒப்புரவு அருளடையாளத்திற்கு சிறப்பு கவனம் செலுத்தவும், நற்செய்தியை புதிய வழிகளில் அறிவிக்க ஊக்குவிக்கவும்

**சரியான விடை எழுதி பரிசு பெறும் வெற்றியாளர்கள்**

1. **Francis Aloysius, KK Nagar, Chennai.**
2. **Sr. Jemila Kalai Selvi, Pudukottai.**
3. **Sr. Arockiamary, Pudukottai.**

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜனவரி 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியை குறிப்பிடவும்)

## சுடர் வாசகப் போட்டி 19

1. ஒருவரும் பாவிகளாயிருக்கக் கூடாது என்ற எண்ணம் கொண்டசனவரி மாத புனிதர் யார்?
2. மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை எழுதியது யார்?
3. தான் மட்டுமே மன்னிக்ககூடிய பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை யாருக்கு அளித்துள்ளார்?
4. கத்தோலிக்க கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களின் பாதுகாவலர் யார்?
5. மிக மோசமான பாவம் என்பது மற்றவர்களை தீர்ப்பிடுவதிலும், புரணி பேசுவதிலும் உள்ளது. இது யாருடைய கருத்து?
6. தூய ஊர்சுலம்மாள் யாருக்கு பிரியமானவர்
7. தூய சலேசியார் கூறிய கடைசி வார்த்தை என்ன?
8. இம்மாதம் இரக்கத்தின் முன்மாதிரியாக தீபகச் சுடர் யாரைக் குறிக்கிறது?
9. ஓடு, பாடு, விளையாடு ஆனால் பாவம் மட்டும் செய்யாதே கூறியது யார்?
10. வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார் - கூறியது யார்?
11. உரோமை அதிபர் டையோகிளிஷியின் தூய செபஸ்தியாரை எப்படி துன்புறுத்தினார்?
12. நாம் செய்த தவறுகளை இறைவன் மன்னிப்பார் ஆனால்... நிரப்புக.
13. மனிதராய் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிட பெரியவர் எவரும் தோன்றியதில்லை யாருக்கு யார் கூறியது?
14. தொன் போஸ்கோ இளையோர் பணியைப் பார்க்கும் 4 கோணங்கள் யாவை?
15. உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாய் இருப்பதுபோல அதிகார வசனம் என்ன?

## அடுத்த சுடரில்

**பகுதி - 1 : வழிபாட்டு வழிகாட்டி**

இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா

தூய அருளானந்தர்

தூய ஆகத்தம்மாள்

தூய கொன்சாலோ கார்சியா

திருநீற்று புதன்

தூய லூர்தன்னை திருவிழா

தூய தமியான்

தூய பேதுருவின் தூய பீடம்

தூய வெர்சீலியா மற்றும் கரவாரியோ

பொதுக்கால ஞாயிறு

தவக்கால ஞாயிறுகள்

**பகுதி - 2 : விசுவாசத்தில் வளர...**

மீண்டும் தவக்காலம் : என்ன செய்ய போகிறோம்?

லூர்தன்னை தரும் செய்திகள்

சிலுவைப் பாதைகள்

# Deepagam Wishes you
# Happy New Year 2016


## கரைத்தேடும் குடும்பங்கள்

**குடும்பங்களை மையப்படுத்திய 80 நிமிட ஒலி ஒளி நாடகம்**
**உங்கள் பங்குகளில் அரங்கேற்றிட விரும்பினால்**

**தொடர்பு கொள்ளுங்கள்:**
**பணி. அந்தோணி கிறிஸ்டி சச.**
**அலைபேசி: 9840631175**


**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதிப்பெற ஆண்டு சந்தா ரூ. 50/ செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்துக்கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45. லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்: ..............................
முகவரி: ..............................
........................................
........................................
........................................
தொலைப்பேசி: ……………